கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 33
புரட்டாசி 2 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## கத்தோலிக்க - அங்கிளிக்கன் கூட்டக்குழு மீளவும் கூடுகின்றது

கத்தோலிக்க, அங்கிளிக்கன் கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமையைக்காண பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பரினாலும், அங்கிளிக்கன்சபைத் தலைவர் ரூம்சே அடிகளாராலும் நியமிக்கப்பட்ட விசேஷ ஆராய்வுக் குழுவினர் இருவருடங்களுக்குமுன் இருசபையினருக்கும் நற்கருணைத் திருவருட்சாதனத்திலுள்ள விசுவாச ஒற்றுமைகளை தகுந்த பரிசீலனையின் பின் வெளிப்படுத்தினர். இதன்பின் ஒற்றுமைக்குப் பெருந்தடையாயிருக்கும் விஷயம் இருசபையினரதும் குருத்துவத்தகைமையே—1896-ம ஆண்டில் 13-ம் சிங்கராயப் பாப்பரசர் அங்கிளிக்கன் சபையினரின் குருத்துவம் தகைமையற்றது எனக்கூறியிருப்பது முறையாவென அங்கிளிக்கன் சபையினர் வாதாடுகின்றனர். இதுபற்றி ஆராய நியமன குழுவினர் ஆவணி 30 தொடக்கம் புரட்டாசி 7-ம திகதி வரையும் இத்தாலிதேச ஙசாடா கிராமத்தில்கூடி இருக்கின்றனர்.

## தீய தோழர்கள்

(—இராமை சூ. மிக்கேல்ராஜ்)

தீய சினிமாப் படங்கள், தீய நூல்கள், தீய பேச்சுக்கள் ஒரு நல்லமனிதனை இடறிவிழச் செய்வதைப் போன்று, தீய தோழர்களும், நல்ல ஒரு மனிதனை இடறிவிழச் செய்கிறார்கள். தீய தோழர்களின் மூலமாகத்தான் சாத்தான் நல்லவர்களைக் கெடுத்து தன் ஆட்சியை இவ்வுலகில் நிலைநிறுத்த எத்தனிக்கிறான். தன்னால் சாதிக்க முடியாததை அவர்கள் சாதித்து விடுவார்கள் என்றநம்பிக்கையில்தான் தீய. தோழர்களைத் தனது பிரதிநிதிகளாக இவ்வுலகில் நியமித்துள்ளான்!

அல்லியும், தாமரையும் பின்னிக்கிடக்கும் அழகான ஒரு சிறு குளத்திலே எருமைமாடு ஒன்று புகுந்து அதைக் கலக்கியதைப்போன்று, ஒருகாலத்தில் கள்ளங் கபடற்ற தூய உள்ளத்தோடு வாழ்ந்த எத்தனையோபேர்கள் பின்னர் தீய நட்பின் பயனால் கெட்டழிந்ததையும் வரலாறு வாயிலாக அறிகிறோம். எடுத்துக்காட்டாக, அஞ்ஞானப்பெண்களோடு உறவுவைத்துக் கொண்ட ஞானி சாலமோன் பின்னர் விசுவாசத்தையும், ஞானத்தையும்இழந்து மோக பாவச் சகதியிலே விழுந்து மடியவில்லையா? தாய்ப் பாலோடு ஞானப்பாலையும் உண்டு வளர்ந்த புனித அகுஸ்தீன் இளம் பருவத்தில் தீய நண்பர்களுடன் கொண்டுள்ள உறவின் பயனால் எண்ணற்ற மோகபாவங்களுக்குப் பலியாகவில்லையா? தீயநட்பின் கொடிய விளைவுகளைப் புனித அகுஸ்தீன். பட்டு அனுபவித்ததினால்தானே, "ஓ! தீய சகவாசமே! உன்னைப்போல ஆன்மாக்களை அழிக்கக்கூடிய கொடுமைக்காரன் இப்புவியில் இல்லவே [illegible]ல்லை!" என்று கண்ணீர் மல்கக் கூறினர்.

ஆற்றுநீர் சுவையானதுதான். கடல்நீர் கைப்புடையதுதான். ஆனால் ஆறு ஓடிச் சென்று உவர்க்கடலோடு கலந்தபின்னர் ஆற்றுநீருக்கென்று ஏதாவது தனித்தன்மை உண்டா? இல்லையே! இதுபோல நல்ல பண்புள்ள ஒருவன் தீய நண்பனோடு நெருங்கி உறவாடும்பொழுது அவனும் தீயவனாகவே மாறிவிடுவது இயல்புதான்.

பச்சோந்தியின் நிறம் சூழ்நிலைக்கேற்பத் தானாக மாறிக்கொண்டே இருக்குமாம், மரத்தின் தளிர்களிடையே இருந்தால் அதன்நிறம் பச்சையாகவும், கிளைகளில் இருந்தால் அக்கிளைகளின் நிறமாகவும், மலர்களிடையே சென்றால் மலர் நிறமாகவும் மாறிவிடுமாம். மனிதர்களாகிய நாமும் ஒருவகையில் பச்சோந்திக்கு ஒப்பானவர்கள்தாம். சூழ்நிலைக்கேற்ப நம்முடைய பேச்சும் நாம் உணராமலேயே மாற்றம் பெற்றுவிடுகின்றன.

நாம் தீயவர்களுடன் நெருங்கிப் பழகப்பழக அவர்களைப் போலவே ஆகிவிடுகின்றோம். தீயில் இடப்பட்ட விறகுக் கட்டைகளைப்போல நாமும் தீக்கங்காக மாறிவிடுகிறோம். தீமையுடன் ஒருவன் வைக்கும் பற்று அவனை விரைவில் பற்று நிலையிலிருந்து அடிமை நிலைக்குக் கொண்டுசெல்கிறது. அடிமை எவ்வாறு கட்டுண்டு விடுவானோ அவ்வாறே தீமையுடன் நட்புக்கொண்ட மனிதனும் ஆவான். சேற்றில் வீழ்ந்தால் அதிலிருந்து தப்ப முடியாது என்றிருக்கும் போது, பகுத்தறிவுள்ள மனிதன் அதன்அருகில் விளையாடலாமா, என்ன? கொடிய

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தயங்காத பிரித்தானிய நாடு

பல நேர்மையான அரசியல் முறைகளுக்கு உலகுக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவது பிரித்தானிய தேசம்—சில வருடங்களுக்கு முன் யூகன்டா தேசத்துக்கு பிரித்தானிய பாராளுமன்றம சுதந்தரம் அளித்தபோது அங்குள்ள ஆசியர் விருப்பப்பட்டால் பிரித்தானிய பிரசைகளாகத் தொடர்ந்திருக்கலாமென்றும் அதில் அடங்கிய உரிமைகளை அவர்களுக்கு அளிக்க பிரித்தானியா என்றும் தயாராயிருக்குமென்றும் வாக்குறுதி அளித்திருந்தது. அண்மையில் சுதந்தர யூகன்டாதேச ஜனாதிபதி அமின் என்பவர் யூகன்டாதேச ஆசியரை நாடுவிட்டு மூன்று மாசத்தில் அகன்றுவிட வேண்டுமெனக் கட்டளை விட்டிருக்கின்றார். பலவகைகளிலும் கஷ்டப்பட்டுவரும் பிரித்தானியாவுக்கு இது பெரும் பாரமாக இருப்பினும், தமது கடமையைச் செய்ய அவர்கள் முன்வந்திருக்கின்றனர். இதற்காக சாம்ராஜ்ய நாடுகளின் உதவிகளைக் கேட்டிருப்பதோடு அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத யாவரையும் தமது தேசம் ஏற்றுக்கொள்ளுமென்று கூறிப்பெருங்குணம் காட்டியிருக்கின்றனர்.

## ஐந்துவருட திட்டத்தில் கல்வியின் இடம்

அகில இலங்கைக் கத்தோலிக்க கல்வி ஆலோசகர் சபையின் ஆதரவில் புரட்டாசி மாதம் 16-ம் திகதி 5வருட திட்டத்தில் கல்வியின் இடத்தைக ஆலைசி ஆராய ஒரு சிந்தனைக்கூட்டம் கொழும்பில் நடைபெற இருக்கிறது. அன்று தினம் இலங்கைக் கல்வி அமைச்சின் செயலாளராகிய கலாநிதி பிரேமதாச உடுகம நிலைமையை விளக்கி வைப்பார். கல்வி விஷயத்தில் கவனத்தைச் செலுத்தும் பெரியார் பலர் சமய வேறுபாடுகளின்றி இக்கூட்டத்தில் கலந்து ஆலோசனைகளிற் பங்குபெறுவார்களென அறிகிறோம்.

## கிறீஸ்தவ சேவையில் சுற்றுலாச் சினிமாக் காட்சி

இலங்கைத் தீவின் நாலு பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு கிறிஸ்தவ சேவைகளையும் சமய வரலாறுகளையும், புனிதர் வாழ்க்கைகளையும் வேதபோதகத்தையும படக் காட்சி மூலம் கிறீஸ்தவர்களுக்கும், பிறருக்கும் வெளிப்படுத்துவதற்காக திரு மறைபோதக மத்திய நிலையத்தினர் சென்றவாரம் ஒழுங்குகள் செய்திருக்கின்றனர். இத்திட்டத்தின்படி முறைக்கு முறை இந்நிலையத்தினர் தீவின் பல மேற்றிராசனங்களுக்கும் விஜயம் செய்து ஆங்காங்கே உள்ள திருமறைப் போதக நிலையத்தினருடைய ஒத்துழைப்புடன் சேவை புரிந்து வருவர்.

## பரி. தந்தையின் அன்புக் கொடை

பரி. தந்தை இருவருடங்களின்முன் இலங்கைக்கு விஜயம் தந்தபோது இங்குள்ள குஷ்டரோகிகளின் வைத்திய சேவைக்கென அளித்த அன்புக்கொடையை உபயோகித்து கொழும்புப் பெரிய வைத்தியசாலையில் தற்கால வைத்திய வசதிகள் யாவும் அமையப்பெற்ற குஷ்டரோக நவீன பரிகாரசாலை நிறுவப்பட்டிருக்கின்றது. இப்பரிகாரசாலை பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரின் அன்புக்கொடையெனக் குறிக்கும் பளிங்குக்கற்சாசனம ஐப்பசி மாதம் 2-ம் திகதி சுகாதார மந்திரி அரியதாச அவர்களினால் திரைநீக்கம் செய்யப்படும்.

## உலக சமாதானத்துக்கு ஐக்கிய ஐரோப்பா உதவியாகலாம்

சென்ற வாரம் பரிசுத்த தந்தையின் கோடைக்கால வாசஸ்தலத்தில் பெல்ஜிய தேச புதிய தூதுவர் பாப்பரசர் 6-வது சின்னப்பர்முன் தமது நியமனபத்திரத்தைச் சமர்ப்பித்தபோது பரிசுத்த தந்தை புதிய தூதுவரை வரவேற்று ஆற்றிய சிற்றுரையில் பெல்ஜிய தேசத்தின் வெளிநாட்டுக் கொள்கை உலகசமாதானத்தை அடிப்படையாகக் கொண்டது கண்டு தமக்குள்ள பெருமகிழ்ச்சியைத் தெரிவித்தார். மேலும் பெல்ஜியதேசம் அங்கத்துவம் வகிக்கும் ஐரோப்பிய பொதுச்சந்தை ஸ்தாபனம் வளர்ச்சியுறுவது உலகசமாதானத்துக்கு உறுதியளிக்குமெனவும் இந்த ஸ்தாபனம் அதற்குத் தேவனால் கொடுக்கப்படும் சந்தர்ப்பங்களை வழுவவிடாதுசமாதானத்தை நிலைநாட்டுவதே முதல்நோக்கமாகக் கொண்டு உழைத்து வந்தால் ஒப்பற்ற நிறுவனமாக விளங்குமெனவும் கூறினர்.

### "களைப்புற்றிருக்கிறேன்" — பரி. தந்தை

கோடைகால ஓய்வு பெற்றுக்கொள்வதற்காகரோமாபுரிக்கு 20மைலுக்கு அப்பாலுள்ள தனது கோடைகால வாசஸ்தலமாகிய கார்சில் கான்டெல்பா எனும் இல்லத்துக்கு வந்திருக்கும் பரி. தந்தை அங்கு தன்னை வரவேற்க கூடியிருந்தோருடன் அளவளாவுகையில் தான் களைப்புற்றிருப்பதாகவும் கார்சில் கான்டெல்பான் சுகந்த காற்றைச் சுவாசித்து சுகமடையத் தான் ஆவலாயிருப்பதாகவும் கூறினர்.

## சமூகநீதி நிலவவேண்டும்

கிறீஸ்தவ இளைஞர் இயக்கத்தினர் சென்றவாரம் கூடி நாட்டில் இன்று நடக்கும் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து கொண்டனர். அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட நிலச்சீர்திருத்த திட்டம் பொதுவாக யாவராலும் வரவேற்கப்பட்டது. ஆனால், அரசாங்கத்தின் கையில்சேர இருக்கும் மேல்மிச்சமான நிலபுலன்கள் மிகக்கவனமாக சமூகநீதியின் அடிப்படையில் நிலமில்லாதவர்களுக்கிடையில் பங்கீடு செய்யும் போது நாட்டுக்கு நன்மை விளைவிக்கத்தக்க முறைகள் கையாளப்பட வேண்டுமென வற்புறுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை என்பது ஒரு கடல். அந்தக் கடலிலே முத்துக்கள்தான் பிறக்க வேண்டும் காளான்கள் பிறக்கக்கூடாது.

# சத்தியவேத பாதுகாவலன்

## குருமாருக்காக மன்றாட்டு

"சமாதானத்தோடு சென்று எனக்காக மன்றாடுங்கள்" என்ற வார்த்தைகளை அடிக்கடி கேட்டிருக்கிறோம். பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுத்து முடிந்தபின் பல தடவைகளில் தனக்காக மன்றாடும்படி குருவானவர் கேட்கிறார். அவ்வேளையில் இவ்வார்த்தைகள் எமது மனதில் அவ்வளவாக உறைப்பதில்லை. எமது பாவங்கள், அவற்றைச் சரியாக அறிக்கையிடுவது, குருவானவரின் புத்திமதிகள், சொல்ல வேண்டிய பரிகாரச் செபங்கள் என்னும் பல யோசனைகளுள் குருவானவருக்காக மன்றாட அநேக தடவைகளில் மறந்து போகிறோம்.

குருவானவர் தமக்காக மன்றாடுமாறு ஏன் கேட்கிறார்? எங்களைவிட அதிக செபம் செய்கிறவர் அவர்தானே. எங்களுடைய செபம் அவருக்கு எதற்கு? என்ற கேள்வி எழலாம். ஆம், குருவானவருக்கு எமது செபம் தேவைதான். நாம் அவருக்காக மன்றாடுவதாக அறியும்போது அவருக்கு அது எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறது. இறைவன் அவர் கையில் ஒப்படைத்த ஊழியம் மிகக் கடினமானது. தமது சொந்தத் திறமையினால் மட்டும் அவர் அதைத் திறம்படச் செய்யமுடியாது. அவருக்கு ஒத்தாசை தேவை. எல்லாவற்றையும்விட மேலான ஒத்தாசை அவருக்காக மன்றாடுவது. ஆன்மாக்களை இறைவனிடம் அழைத்துச் செல்லும் பணிக்கு ஏராளமான செபம் தேவை.

அது மட்டுமல்ல. குருத்துவபணி செய்வோருக்குத் தனிப்பட்ட முறையிலும் மக்களுடைய செபம் பெருந்துணை புரிகிறது. குருப்பட்டம் பெற்றாலும் அவர்களும் மனிதர்களேயாதலால், எந்த சாதாரண மனிதனுக்குமுரிய கஷ்டங்கள், சோதனைகள், கவலைகள், வருத்தங்கள் அவர்களுக்குமுண்டு. மேலும், சாதாரண மக்களைவிட அதிக பொறுப்புகள் அவர்களுக்கு உண்டு. ஒரு குருவானவர் பங்கிலுள்ள இறைமக்களின் தந்தை. அவர்களுடைய சுகதுக்கங்களில் அவருக்கும் பங்குண்டு. பங்கிலுள்ள ஒழுங்கீனங்கள், தப்பெண்ணங்கள், நிதிப்பிரச்சனைகள், ஒற்றுமைக் குறைவுகள் முதலியன அவருக்கு ஓயாத தலையிடியைக் கொடுக்கின்றன. அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் அவதானிக்கப்பட்டு விமரிசிக்கப் படுகின்றன.

இறைவன் எம்மீது அன்புகூர்ந்து எமக்கு ஆன்மீகப் பணிபுரிய குருமாரைத் தந்திருக்கின்றார். எமது நன்றியைக் காட்டுவதற்காக இறைவனுக்குப் புகழுரைப்போம். அதே வேளையில் அவர் அனுப்பிய குருமார்களுக்காக மன்றாடுவோம். எமக்குப் பிடித்தமானவர்களுக்காக மட்டுமல்ல, எமக்கு அதிக நன்மையைச் செய்தவர்களுக்காக மட்டுமல்ல, பக்திமான்கள் என்று பெயர்பெற்றவர்களுக்காக மட்டுமல்ல, எல்லோரையுமே எமது செபத்தில் நினைவுகூரவேண்டும். எந்தக் குருவிடமாவது குறைபாடுகள் காணப்பட்டால் அல்லது அவர் தவறுகள்செய்தால் அவருக்குத்தான் அதிக மன்றாட்டு தேவைப்படுகிறது என்பதை மறந்துவிடலாகாது. அவரது குறையை நிறைவு செய்வதற்கும், அவரது போராட்டத்துக்குப் பக்கபலமாகவும் செபம் உதவுகின்றது.

ஆகவே, எமது குருமாரை ஆசீர்வதித்து அவர்களைச் சகல ஆபத்துக்களினின்றும் காத்துக்கொள்ளும் படியாகவும், அவர்களது ஊழியத்துக்குத் தக்கபலனை அளிக்கும்படியும் இறைவனிடம் வேண்டுவோமாக. அவர்களது பணியைத் தொடர்ந்து செய்வதற்கு மேலும்பல குருமார்களை அனுப்பும்படியும் பிரார்த்திப்போமாக.

## கன்னியாஸ்திரி இரகசிய பொலீஸ் ஆனர்

31வயது நிரம்பிய ஜோவானே பியேர்ஸ் என்னும் மாது ஐக்கிய அமெரிக்காவில் பத்து வருடங்கள் கன்னியாஸ்திரியாயிருந்ததன்பின் அச்சபையின் தலைவர்களின் அனுமதியுடன் அதைவிட்டு நீங்கி இப்போது அத்தேச இரகசிய பொலிசார் பிரிவில் சேவைசெய்து வருகிறார். இவர் இருசர்வ கலாசாலைகளின் பட்டதாரி. இரகசிய பொலிசார் சேவையில் தன்னைத்தயார் செய்துகொள்வதற்காக பலவகைத் துப்பாக்கிகளைப் பாவிக்கவும், நாளுக்கு இருமைல் தூரம் ஓடவும், பலவகைப்பட்ட தேகாப்பியாசங்கள் செய்யவும் வேண்டியிருப்பதால் துரிதமாகப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

## மருதமடு ஐப்பசித் திருநாள்

விசேஷ காரணங்களின் நிமித்தம் இவ்வருட ஐப்பசித் திருநாள் 22-9-72-இல் ஆரம்பமாகும். முடிவடையும் தினம் 1-10-72, 7-10-72-இல் அல்ல.

திருப்பதிப் பரிபாலகர்.

## கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்

**கத்தோலிக்க நற்சிந்தனை:**
நாள்: 2, 3, 4 —9—72
நேரம்: காலை 6-25
வழங்குபவர்: மறைத்திரு ஜோர்ஜ் பெரேரா

*    *    *

**இளைஞர் நிகழ்ச்சி:**
நாள்: 6-9'-72
நேரம்: மாலை 6-15
வழங்குபவர்: மறைச் சகோதரி மங்களம்

## கருதினல்மாரில் மிக வயோதிபர் ஜியோபே அடிகளார் காலமானர்

92 வயது நிரம்பிய கருதினல் ஜியோபே அடிகளார் அண்மையில் ரோமாபுரியில் காலமானர் என்னும் துக்க செய்தி கிடைத்திருக்கின்றது. அவர் மரிக்கும்போது இன்றுள்ள கருதினல்மார் யாவரிலும் மிகவயோதிபர் அவரே. ஜியோபே அடிகளார் தனது சீவியகாலம் முழுவதும் 23-ம் அருளப்பருடன் நெருங்கிய நண்பன். 1904-ம் ஆண்டு குருப்பட்டம் பெற்று பலவருடகாலம் வத்திக்கான் காரியாலயங்களில் பலவகைப்பட்ட தொண்டுகளிலும் ஈடுபட்டிருந்து, பின் அதிமேற்றிராணியாராக்கப்பட்டு தென் ஆபிரிக்கா கொலம்பியா தேசத்திலும் ஐரோப்பாவில் ஒல்லாந்திலும் பாப்பரசரின் தூதுவராக இருந்து மீளவும் வத்திக்கானுக்கு அழைக்கப்பட்டுக் கருதினலாகி அங்கு வதிந்துவந்தார். இவர் மரணத்தின்பின் கருதினல்மாரின் தொகை 117.

### ஓய்வு பெறும் கருதினல்

கொலம்பியாதேச பெகோற்றா நகர அதிமேற்றிராணியாராகிய கருதினல் கொன்சா அடிகளார் தமது வயோதிபத்தின் காரணமாக ஓய்வு பெறப் பரிசுத்த தந்தைக்கு விண்ணப்பித்து அவரது அனுமதியையும் பெற்றுக் கொண்டார். கொன்சா அடிகளாரின் வயது 81. இவரது தகப்பனர் கொலம்பியாதேச ஜனதிபதியாக ஒருகாலம் கடமையாற்றியவர்.

## அடைக்கல நாயகியே!

பூதலமே தோன்றுமுன்பு தேவமைந்தன்
பூத்திருந்த ஆலயமே! மனுக்குலத்தின்
பாவவினை மாசறுத்த சுடரே! தூய
பரகதியின் வாய்க்காலே! கற்பினுக்கோர்
ஓவியமே! உதயதாரகையே! ஞான
ஊறணியே! நிர்மலவுற் பவமே! என்றும்
ஆதுலரின் ஆகாரமே! அருளின் வீடே!
அடைக்கலநாயகியே! நின்னருள்தா அம்மா.

பொன்நிலவு பூம்பதத்தில் வந்துதாழப்
பொங்குமணிச் செங்கதிரின் ஆடைசூழ
மின்னுமணித் தாரகைபொன் மகுடஞ்சூட
மேலோக பூலோக ராணியாகக்
கன்னிகையுந் தாயுமென மகிமைபூத்துக்
காசினியை யீடேற்ற வந்தசெல்வி!
அன்னையுனைத் தேடியிரந் தோடிவந்தோம்
அடைக்கலநாயகியே! நின்னருள்தா அம்மா.

"கல்லினிலே சமைத்தவொரு கீதம்" என்றே
கலைப்புலவர் ஞானப்பிரகாசர்வாழ்த்த
எல்லையிலாப் புகழ்விஞ்ச யாழூர் தன்னில்
எழில்கொஞ்சும் சேதிமத்தில் இலங்கும் வான
பல்லிகையே! எருசலேம் மகிமையே! தேன்
மழை முகிலே! சந்ததமும் மைந்தரெங்கள்
அல்லலெல்லாம் தீர்த்தருளும் அன்புத் தாயே!
அடைக்கலநாயகியே! நின்னருள்தா அம்மா.

யாழ். "ஜெயம்"

## ஒல்லாந்துதேச தேசிய மேய்ப்புத் திட்டம் நிறைவேற்றம் பெருதது ஏன்?

ஒல்லாந்துதேச கருதினல் அல்பிறிங்க் அடிகளாரின் தலைமையில் உருவாக்கப்பட்ட தேசிய மேய்ப்புத்திட்டம் நிறைவேற்றம் பெறும் காலம் வத்திக்கான் அதிகாரிகளின் யோசனையின்படி பின்போடப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தில் ஆயர்மாரின் ஆன்மஅதிகாரம் போதியளவு பாதுகாக்கப்படவில்லை என்பதும், தயாரிக்கப்பட்ட திட்டம் நிறைவேற்றப் பெறுவதற்கு மேலும் சில காலம் கழியவேண்டுமென்பதே வத்திக்கான் அதிகாரிகளின் அபிப்பிராயமாகும். அல்பிறிங்க் அடிகளார் அண்மையில் அளித்த தொலைக்காட்சிப் பேட்டியில் மேற்றிராணிமார் குருமார் பொதுநிலை மக்கள்யாவரும் ஒன்றுசேர்ந்து திருச்சபையை நடப்பிக்கும் பொறுப்புடையவர்கள் என்பது வற்புறுத்தப்பட்டிருக்கின்றது என்றார்.

## பூசை வழிகாட்டி
### புரட்டாசி—1972.

4. திங்கள் : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1கொரி. 2: 1—5
லூக். 4: 16—30

5. செவ் : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1கொரி. 2 : 10—16
லூக். 4: 31—37

6. புதன் : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1கொரி. 3: 1—9
லூக். 4: 31—37

7. வியாழன் : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1கொரி. 3: 18—23
லூக். 5: 1—11

8. வெள்ளி : புனித கன்னிமரியா. பிறப்பு [வெ]
**வாசகங்கள் :** உரோ. 8: 28—30
மத். 1: 18—23.

9. சனி : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1கொரி. 4: 9—15
லூக். 6 : 1—5.

10. ஞாயிறு : ஆண்டின் 23ஆம் ஞா. [ப]
**வாசகங்கள் :** எசெக். 33: 7—9
உரோ. 13: 8—10, மத். 18: 15—20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அடியாருக்கு அடியார் 23-வது அருளப்பர்"

இறையடியார்களின் பெருமைக்கு ஈடு எதுவும் இல்லை. அவர்களின் வாலாற்றினைக் கேட்பவர் சித்திபெறுவர்,— என்பது தமிழர்களின் சித்தாந்தம் உலகக்கண்ணேட்டத்தில் நோக்கின், அடியார்களின் வாழ்க்கை உப்பும் சப்புமற்றதாகத் தோன்றும். முதுசெவ்விக்கனி போன்றது அவர்கள் வாழ்க்கை. முதலில் கசக்கும், பின் இனிக்கும். இறையடியார்கள் வாழ்க்கையினைப் படித்ததால் தூயவர்களானவர் பலர். அவர்களில் ஒருவர் தூய லொயோலா இஞ்ஞாசியார். பல அடியார்கள் மக்களால் 'பித்தர்கள்' என நகையாடப்பட்டனர். ஏன்? உலக வாழ்க்கையின் போதையில் மக்கள் தம்மையே மறந்தனர். மாக்களாயினர். இறைவனையோ, அவர் நெறியினையோ, அடியார்களையோ விரும்பினார்கள் இல்லை. இவர்கள் கதி? யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதைப்போன்றது. தூயபதுவை அந்தோனியாரின் மறை உரையை மக்கள் கேட்க முன்வராதபோது மச்சங்கள் கேட்டனவே! தம் சொல்லாலும், செயலாலும், அகிலத்தினரின் அன்பையும் பாராட்டுதலையும் பெற்றவர்தான் பாப்பிறை 23-வது அருளப்பர்.

இத்தாலியின் எழில்மிகும் பள்ளத்தாக்கு லம்பார்டியாகும். இங்கு பெர்காமோ என்ற மறை மாவட்டம் உள்ளது. இம்மறை மாவட்டத்தில் சோத்தோ இல்மோங்தே என்ற குக்கிராமம் ஒன்றுள்ளது. இவண் ரோன்காலி என்ற பழைய குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இம்மரபில் ஜியோவானி பாத்தீஸ்தா, மரிய அன்னு என்பவர்களின் மூத்த பிள்ளையாக 23-வது அருளப்பர் 1881-ம் ஆண்டு கார்த்திகை திங்கள் 11ஆம் நாள் பிறந்தார். ஆஞ்செலோ ஜியுசேப்பே என்ற பெயர் இவருக்கு ஞானநீராட்டுதலின்போது தரப்பட்டது. எனவே இவர் ஆஞ்செலோ ஜியுசேப்பே ரோன்காலி என அழைக்கப்படலானார். பத்துப்பிள்ளைகளைப் பெற்ற இவர் பெற்றோர் ஏழைகள். கழனிகளில் உழைத்து வாழ்க்கையை நடத்தினர். திராட்சை இரசம், இறைச்சி, என்ற உணவுப் பொருட்கள் இவர்கட்கு என்றோ ஒரு நாள் கிடைத்தது. ஆயின் வறுமையிலும் செம்மையாகவே வாழ்ந்தனர்.

தமது ஊரிலேயே ரோன்காலி தொடக்கக் கல்வியினைத் தொடங்கினார். மிகவும் அடக்கமானவர். படிப்பில் கெட்டிக்காரர். எனவே அழுக்காறு கொண்ட மாணவர்கள் அவர் இல்லம் செல்லும்போது அவர் மீது கற்களை வீசினர். அவர் அவர்களைப்பார்த்து அமைதி நிறைந்த புன்னகை புரிந்து சென்றார். தேவ அழைத்தலினை ஏற்ற சிறுவன் குருமடம் செல்ல விரும்பினான். சிறுவன் கொஞ்சம் பணமாகிலும் கொண்டு குருமடஞ் செல்லவேண்டுமென அப்பங்குத்தந்தை அறிவித்தார். ரோன்காலியின் அன்னை பரம ஏழை ஊர் முழுவதும் அலைந்தாள். அவளுக்குக் கிடைத்தது 2 லீரே அதாவது 2 ரூபாய் மதிப்புள்ள இத்தாலிய நாணயம். அதனை மேசை மீது வைத்துவிட்டு கதறி அழத் தொடங்கிவிட்டாள். இத்தகைய ஒரு வறுமை நிலையில் தான் சிறுவன் ரோன்காலி குருமடஞ் சென்றான்.



விரைவில் உரோமாபுரியிலுள்ள பெரிய குருமடஞ் சென்று மறை இயலில் மேதையர் பட்டம் பெற்றார். உரோமாபுரியிலுள்ள சாந்தாமரியா இன் மோங்தே சாந்தோ என்ற ஆலயத்தில் 1904ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 10ஆம் நாள் குருப்பட்டம் பெற்றார். 24 வயதிற்கு முன் குருப்பட்டம் தருவதில்லை. ஆயின் இவருக்கு ஒரு தனி விதிவிலக்கு இதில் அளிக்கப்பட்டது. பெர்காமோ ஆயர் இவரைத் தமது செயலாளராக நியமித்தார். 1905 முதல் 1914வரை அவர் பெர்காமோ ஆண்டகையின் கீழ் நல்ல நிர்வாகத் திறமையினை அடைந்தார். அவருடன் மிலான் சென்றபோது தூய அமிர்தநாதர் நூலகஞ் சென்று நூலாராய்ச்சியிலீடுபடலானார். ஆண்டுதோறும் பிரான்ஸ் செறா பவமாநாடுகளில் கலந்தார். இவரை பிள்ளைக்குப் பிள்ளையாய் நேசித்துவந்த பெர்காமோ ஆண்டகை ராதினிதே தோஸ்கி 1914-ல் காலமானார். என் வாழ்வின் வழிகாட்டியான "துருவத்தாரகை" மறைந்துவிட்டதே என உரைத்து மனம் மிக வருந்தினார்.

1914-ல் உலகப்போர் மூண்டது. அரசு ஆணைக்குப் பணிந்து ரோன்காலி அடிகள் படைக்களஞ் சென்றார். மருத்துவ நிலையங்களின் விசாரணைக் குருவாகச் செயல்பட்டார். காயமுற்ற பல நக்கு மருத்துவ உதவி புரிந்தார். அவர்களின் ஆன்ம தாகத்தையும் தணித்தார். ஜேர்மனியர்களிடம் பரிந்துரைத்து மரணதண்டனை பெற்ற பல கைதிகட்கு விடுதலையினைப் பெற்றுத்தந்தார். பாப்பிறை 15ஆம் ஆசீர்வாதப்பர் இவரின்

M. S. J. தங்கசாமி, M. A., B. T.

திறமையினை மெச்சினார். இவரை விசுவாசப் பரப்புதல் சபையின் ஒரு முக்கிய உறுப்பினராக நியமித்தார். 11-வது பத்திநாதர் பாப்பாசர் இவரை புனித ஆண்டு 1925 கொண்டாட்டத்திற்கான குழுவின் தலைவராக்கினார். 1925ஆம் வருடப் பங்குனித் திங்கள் 19ஆம் நாள் இவரை அரியா போலீஸின் கௌரவப் பேராயராக நியமித்து பல்கேரியா நாட்டிற்குப் பாப்பிறையின் பார்வையாளராக அனுப்பிவைத்தார். பின்னர் துருக்கி நாட்டிலுள்ள கொன்ஸ்தாந்தி நோபிளின் இலத்தீன் ரீதியினரின் பரிபாலகராக அனுப்பினார்.

கொன்ஸ்தாந்திநோபிளில் துருக்கர், பிரிவினை மதத்தினரும் இவரை "எங்கள் தந்தை" என்று அழைக்கும் அளவிற்கு அவரது ஆட்சி அமைந்தது. நம் மறை ஆலயங்களில் துருக்கிய மொழியில் இறைவழிபாடு நடத்தப்பட வேண்டுமென ஏற்பாடு செய்தார். இவரின் ஆழ்ந்த அரசியல் அறிவைக் கண்டு வியந்த பாப்பிறை 12ஆம் பத்திநாதர் இவரை 1944-ல் பிரான்ஸ் நாட்டிற்குத் தனது தூதுவராக அனுப்பிவைத்தார். பிரான்ஸ் நாட்டில யுத்தக்கைதிகளாக இருந்த ஜேர்மன் நாட்டு குருமடம் ணவர்களுக்கென ஷார்தா என்ற இடத்தில் குருமடம் ஒன்றினை அமைத்தார். அவர்கள் குருப்பட்டம் பெற்றபின் தத்தம் ஊர்கட்குச் சென்று திருப்பணி செய்யும் வாய்ப்பினை அரசிடம் பரிந்து பேசி அளித்தார். ஜேர்மன் நாட்டு கைதிகள் பலர் விடுதலை பெற அயராது உழைத்து வெற்றிகண்டார். ஜேர்மானிய அரசு "மாபெரும் சிறப்புச் சிலுவை" (Grand Cross of Merit) என்ற கௌரவப் பதக்கத்தை இவருக்கு அளித்து பெருமைப்படுத்தியது. பிரான்ஸ் ஜனாதிபதி தளபதி தேகாலும், அவருக்குப்பின் வந்த ஓரியேலும் இவரின் நெருங்கிய நண்பர்கள். யுத்தத்தால் சீரழிந்த பிரான்சின் மறுமலர்ச்சிக்கு இவர் பெரிதும் உதவினார். பிரான்ஸ் நாட்டு பெரிய அரசியல் நிகழ்ச்சிகளில் இவர் கலந்தார்.

12ஆம் பத்திநாதர் பாப்பரசர் இவரை 1953ஆம் ஆண்டு கருதினால் பதவிக்கு உயர்த்தினார் துருக்கி அரசு தன் நாட்டின மரபிற்கு மாறாக இவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியது இதைத்தொடர்ந்து சில நாட்களிற்குள் வெனிஸ் நகரப் பேராயராகவும், பிதாப் பிதாவாகவும் நியமனமாயினர். வெனிஸ் நகரில் மறைவாழ்வு மறுமலர்ச்சியடைந்தது. பேராயரின் ஆலயமான தூயமாற்கு ஆலயத்தைச் செப்பனிட்டார். மருத்துவ மனைகளையும், குருமடங்களையும். துறவறசபை இல்லங்களையும் அமைத்தார். தனது மறை மாவட்டத்தில் மரியன்னையின் வருடமான 1954-ல் சிறப்புடன் கொண்டாடினார். நூற்றிற்கு அதிகமான பங்குகளை பன்முறை பார்வையிட்டார்.

லெபனன் நாட்டுத் தலைநகரான பெய்ரூட்டில் மரியன்னையின் தேசிய மகாநாடு 1954-ல் நடைபெற்றது. இவர் தூய பிதாவின் பிரதிநிதியாகச் சென்றார். அந்நாட்டின் பாதுகாவலியான தேவ அன்னைக்கு ஆடம்பரமாக முடி சூட்டினார். லூர்து பதி சென்று, லூர்து தரிசன நூற்றுண்டு நினைவாகத் தரைக்கடியில் கட்டப்பெற்றுள்ள தூய 10ஆம் பத்திநாதர் ஆலயத்தை பாப்பரசரின் பிரதிநிதியாக அபிஷேகஞ் செய்தார். ஸ்பெயின் நாடுசென்று கொம்போஸ் தெல்லா பட்டணத்திலுள்ள பெரிய யாகப்பரின் கல்லறையைத் தரிசித்தார். 1956-ல் இத்தாலிய நாட்டு இளங்கத்தோலிக்கு சேவைத் தலைவர்கள் பியத்ரோ நென்னி என்பவரின் சோஷலிஷ்டு கட்சியை ஆதரித்தனர். இதை ரோன்காலி ஆண்டகை வன்மையாய்க் கண்டித்தார்.

பாப்பிறை 12ஆம் பத்திநாதர் மறைந்ததும், பிதாப்பிதா ரோன்காலி ஆண்டகையை மக்கள் உரோம் அனுப்பிவைத்தனர். 77 வயதினரான அவர் பாப்பிறை ஆவார் என எவருமே எதிர்பார்க்கவில்லை. 1958ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபத்தைந்தாம் நாள் தேர்வு தொடங்கியது. 51 கருதினால்மார்கள் கலந்து கொண்டனர். 28ஆம் நாள் மாலை நடந்த 11-வது வாக்கெடுப்பில் கர்தினால் ஆஞ்செலோ ஜியுசேப்பே ரோன்காலி ஆண்டகை பாப்பிறையாகத் தேர்வுபெற்றார். தேவ திருவுளத்திற்கு அமைந்து தேர்வு முடிவினை ஏற்று அருளப்பர் என்ற பெயரினைத் தெரிந்து கொண்டார். அவருடைய தந்தையின் பெயர் அருளப்பர். அவர் ஞான நீராட்டுதல் பெற்ற பங்கு ஆலயப் பாதுகாவலர் அருளப்பர். உலகின் பெரும்பான்மையான ஆயர்களின் ஆலயங்களின் பாதுகாவலர் அருளப்பர். உரோமாபுரியிலுள்ள பாப்பிறையின் ஆயர்க்குரிய ஆலயம் அருளப்பர் பெயரைக்கொண்டது. வெனிஸின் பாதுகாவலரான சுவிசேஷகர் தூயமாற்குவின் சொந்தப்பெயர் அருளப்பர். நம் ஆண்டவர் நேசித்த அப்போஸ்தலர் பெயர் அருளப்பர். எனவே அவர் அப்பெயரினைத் தெரிந்ததில பொருள் உள்ளது.

1958ஆம் வருடம் கார்த்திகைத் திங்கள் 4ஆம் நாள் மரபுப்படி அவருக்கு முடிசூட்டும் விழா நடைபெற்றது. லட்சக்கணக்கானோர் அதில் கலந்து மகிழ்ந்தனர். இவ்விழாவின்போது நிகழ்த்திய மறை உரையில் "நலலாயன் அலுவலே நமது அலுவல்" எனக்குறிப்பிட்டார். 23-வது அருளப்பர் பாப்பிறை காட்சிக்கு எளியர். கனணியம் மிக்கவர். ஏழைகளின் நண்பர். நகைச்சுவைத் ததும்ப பேசுபவர். மறை உரை நிகழ்த்துதலில் வல்லவர். பன்மொழிப்புலவர். பெரும் எழுத்தாளர். தூய சார்லஸ் பொரோமியாவின வாலாற்றினை ஐந்து பெரிய புத்தகங்களாக எழுதியுள்ளார். பெர்காமோ மறை மாவட்டத்தின் சரிதையினை ஐந்து நூற்களாக யாத்தருளினார். இதைத்தவிர பல நூற்களும் பிரசுரங்களும் அவரால் வரையப்பட்டுள்ளன.

இவர் காலத்தில் திருச்சபையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இரண்டாவது வத்திக்கான் சங்கத்தைத் தொடங்கினார். தாய்மொழியில், தாய்நாட்டின கலாசசாரத்தை தயொட்டி இறைவழிபாடு நடைபெற ஆவன செய்தார். தம்மை பேட்டிகாண வந்தோருடன் ஆனந்தமாய் அளவளாவினார். பிரிவினை மதத்தினரும் இவர் வாழ்வு தூய வாழ்வு எனப்போற்றினர். 1959ஆம் வருடம் தைத் திங்கள் 25ஆம் நாள் புனித சின்னப்பர் மனந்திரும்பிய திருநாளன்று கிறிஸ்துவ ஒற்றுமைக்காகத் திருப்பலி நிறைவேற்றச் சென்றார். பூசை முடிந்தபின் திருச்சங்கத்தினை கூட்டுதற்கு தாம் விருப்புவதாக அறிவித்தார். எவரும் அதிக அக்கரை காட்டவில்லை, எனவே அவருடைய 1962-ம வருடத் தபசுகால நிருபம் இதைப்பற்றியே இருந்தது. திருச்சங்கத்தை அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள எழு கழுதினால்மார் அடங்கிய குழு ஒன்று நிறுவப்பட்டது. இதில் கருதினால் மோந்தீனி ஆண்டகையும் ஒருவர்.

1962ஆம் ஆண்டின் இறுதியில் பாப்பிறை படுக்கையிலானார். 1963 வைகாசி 31-ல் அவரின் நிலை கவலைக்கிடமானது. அவரின் ஆருயிர் நண்பர் கருதினால் மோந்தீனி ஆண்டகை உரோமாபுரி விரைந்தார். பாப்புவின் மூன்று தம்பிகளும். ஒரு தங்கையும் உரோமாபுரி சென்றனர். மோந்தீனி ஆண்டகையின் காத்தினை பாப்பிறை அன்புடன் பிடித்து அளவளாவினார். சூன் திங்கள் மூதல் நாள் மோந்தீனி ஆண்டகை

(தொடர்ச்சி4-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாத்தளை புனித தோமையார் தேவாலயத்தில் மாபெரும் கொண்டாட்டம்

மாத்தளை விசாரணையில் பொன்னெழுத்தில் பொறிக்கப்படவேண்டிய பொன்னாள் அண்மையில் வந்துவிட்டது. இன்னும் சிலதினங்களிலே அதாவது 1972-ம் ஆண்டு புரட்டாசிமாதம 6-ந் பக்திபரவசமும், ஆசார உபசாரமும் மக்கள் மனதை நிரப்ப ஆயர்களும், குருவானவர்களும், துறவிகளும், பொதுநிலையினரும் ஒருங்கேகூடி சதாசகாயமாதாவின் 1000-வது நோவனையை ஆரவார குதூகலத்துடன் நடத்துவார்கள்.

1953-ம் ஆண்டு ஆடிமாதம் 22-ந்தேதி அர்ச் அக்கினேஸ் அம்மாள் கன்னியர் மடத்து சிரேஷ்ட தாயாரான காலஞ்சென்ற சங். மரியமதலேனாள் அவர்களின் ஆர்வம்நிறைந்த ஊக்கத்தின் பயனாக முதன்முறையாக இந்த நோவினை எமது விசாரணையில் நடைபெற்றது. அப்போதிருந்த கண்டிமேற்றிராணியாண்டவர் மகாவந். டி. பி. றெக்னோ அவர்களின் அனுமதியுடனும், கட்டளைக்குரவர் வண. போல் பெரேரா அவர்களின் உளங்கனிந்த ஆசிருடனும் எமது மேற்றிராசனத்திலேயே முதன் முதலாக நடத்தப்பட்ட நோவனை இதுவே.

முதல் மூன்று நோவனைகளும் கன்னியர்மடத்து சிற்றாலயத்தில் நடைபெற்றன. 8-4-59 தொடக்கம் பங்குக்கோவிலில் புதன்கிழமை தோறும் மாதாவின் நோவனை நடந்துவருகின்றது.

1958-ல் எமது தேசத்தில் நடந்த இரத்த வெள்ளத்திலிருந்து எமது நகரைக் காப்பாற்றிய சதாசகாய அன்னைக்கு அஞ்சலியாக அவளை "மாத்தளையின் பரிபாலினியாகிய மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்" என்று விளிக்க பரிசுத்த பிதாவிடம் உத்தரவு கேட்டோம். 300-ம் நோவனை தினத்தன்று 8-4-59 இல் பரி. தந்தையின் பிரகடனம் கிடைத்தது. மாதாவை அப்படியே விளிக்க உத்தரவும், அதைச் சொல்லும்போதெல்லாம் நூறுநாட் பலனையும் அளித்தார்.

மாதாவின் 500-ம் நோவனை 6-2-62 இல் நடந்தபோது அன்னைக்கும், தம் திருச்சேய்க்கும் பொன்முடி புனைந்து 135 மாணிக்கங்களால் திருமேனியை அலங்கரித்தனர் மாத்தளை மக்கள். அன்றைய தினத்தின் ஞாபகமாக சாதாரண விதிகளுக்கமைய புதன்கிழமை நோவனைகளில் பங்குபற்றுபவர்களுக்கு ஒரு பரிபூரண பலனும் பச்சாத்தாப மனதுடன் மட்டும் பங்குபற்றுபவர்களுக்கு ஏழுவருட பலனும் பரி. தந்தை அளித்தனர்.

சதாசகாயமாதா இந்தவிசாரணைக்குச் சதாசகாயமாகத்தான் இருந்துள்ளார். இப்பவும் எமது வழிபாட்டுச் சடங்குகளுக்கு இடைஞ்சலாய் இருக்கும் பாடசாலைப் பிரச்சனையை மாதாவிடமே சமர்ப்பித்து அவவுடைய சகாயத்தால் ஒரு முடிவைக் காணக்கூடுமென்று காத்திருக்கின்றனர் எமது மக்கள்.

இரு மேற்றிராணிமார்களும் பல குருமாரும், துறவிகளும் நூற்றுக்கணக்கான பொதுநிலையினரும் மாதாவின் ஆயிரமாவது நோவனையை புரட்டாசி 6-ந்தேதி வெகு விமரிசையாகக் கொண்டாடுவர். காலஞ்சென்ற பயஸ் பெர்னாண்டோ சுவாமிகள் 1880 இல் மாத்தளையில் அத்திவாரமிட்டு, பராமரித்து, வளர்த்துவந்த தேவமாதா பக்தி எம்விசாரணையில் இன்று ஊன்றிநின்று ஓங்கி வளர்ந்து, நூறு வருடங்களுக்குள்ளே மாதாவின் ஆயிரமாவது நோவனையாக மலர்ந்து நறுமணம் வீசுகின்றது.

ரேசரி என்ரனி

## அடியாருக்கு......

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மிலான் நகரில் 20 ஆயிரம் மக்களுக்குமுன். 23ஆம அருளப்பர் உடல் நலம் பெற திருப்பலி பூசை நிறைவேற்றினர். 82 அகவையினரான 23-வது அருளப்பர் 1963ஆம் ஆண்டு ஆனி திங்கள் 3-ம் நாள் திங்களன்று காலை 7-45 மணிக்கு "என் அம்மா" என தேவதாயை அழைத்தவாறே உயிர் நீத்தார். அவரின் நண்பர் மோந்தினி ஆண்டகைதான் இன்றைய பாப்பிறை 6-வது சின்னப்பர்.

தாழ்மைமிக்க 23வது அருளப்பர், வையகத்தாரால் பெரிதும் போற்றப்படுகின்றார். அவர் அடியாருக்கு அடியார். இதை நாம் உணர்வோம். அகந்தையினைக் களைவோம்.

நன்றி: முன்னேடி.

# மலைமீது ஒருநாள்

(சங்: மேரி வில்லிஜசா, அ. கா., அச்சுவேலி)

மேய்ப்பன் எங்கேயோ ஆடுகளும் அங்கேதான், திரண்டு விட்டது கூட்டம்; என்ன நடக்கப் போகிறது. போய்த்தான் பார்க்க வேண்டும். அவர் வாய் திறந்தாலே போதுமே. அறநெறி மார்க்கத்திற்கு அவசியமான சற்போதனைகளைக் கொண்ட அரியபாடல் சகல மக்களின் சிந்தனையைக் கிளறி இருதயத்தை இளகச் செய்யும் சிறந்த சொற்பொழிவு. எத்தேசத்தவரும் எம் மதத்தினரும், ஞானிகளும், பாமர மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய அமிர்த போதகம். ஞானமும், நற்போதகமும் நிரம்பிய நிகரற்ற பொற் குவியல். சுவிசேஷத்தில் நாம் காணக்கிடக்கும் விலைமதிக்க முடியாத முத்தான எட்டுப்பாக்கியங்களை அள்ளிச் சொரிகிறார் அவர். ஏழை எளியவர்களைப் பாக்கியவான்கள் என வாயார வாழ்த்திவிட்டு, வருந்தி சுமை சுமக்கும் எம்மைத் தம்மிடம் வரும்படி ஏவுகிறார். தம்மிடமிருந்து சாந்தத்தையும் தாழ்ச்சியையும் கற்கும் தமது இருதய பள்ளிக்கூடத்திற்கு அழைக்கிறார். அப்போது உங்கள் ஆத்துமங்களுக்கு இளைப்பாற்றியைக் கண்டடைவீர்கள் என்கிறார். பாவிகளும் பலவீனர்களும் பயமில்லாமல் தம்மிடம் வரும்படி சாந்த குணத்தைத் தமது விருதுவாக்கியமாகத்தெரிந்து கொள்கிறார். சாந்தமே மக்களை இழுக்கும் காந்தம் என அவர் அறிவார். அவரின் அன்பு மொழிகளால் பாவச்சுமைபால் தாக்குண்டு அல்லற்படுவோரை அழைக்கிறார்.

பரிசுத்தம் கமழும் பாலர் மட்டும் அவர் அன்பால் இழுக்கப்பட்டோர் அல்ல. பாமர மக்களும், பாவிகளும், ஏன் "தான்" என்ற மமதைகொண்ட பரிசேயர் முதலய் அவர் அன்பால் கவரப்பட்டோர் தான். ஒருநாள் நயீம் பட்டணத்திற்குப் போகிறார். விதவையின் அழுகையும் புலம்பலும். இறந்த தன் மகன் பின்னே தலைவிரிகோலம். தாங்கொணாத் துயரம் கண்டார். இரங்கினர். தம்மையே மறந்தார். உடனே நிறுத்தி உயிர் அளித்தார். வாழ்வை அளிக்கும் வல்லபர்.

இன்னொரு நாள் அவர்களுக்கு போதகம் நடத்துகிறார். ஏதோ பெருஞ்சத்தம், ஆரவாரம், அழுகைக்குரல், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள், ஒரு பெண்ணை இழுத்துக் கொண்டு வந்து அவர் முன் தள்ளிவிட்டார்கள். என்ன பரிதாபம், அவர் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. இந்தக் கோரக்காட்சியை சாந்தம் வீசும் முகத்துடனும், இரக்கம் ததும்பும் இருதயத்துடனும் பார்க்கிறார். இந்தப்பெண்ணுக்காகவும், அவள் பாவத்திற்காகவும் துக்கிக்கிறார். இதைவிடக் கள்ளப் பரிசேயரின் முரட்டுத்தனத்தையும் ஈனஇரக்கமற்ற கல்நெஞ்சத்தனத்தையும் நினைந்து வருந்துகிறார். தம் தலையைக் குனிந்து மண்ணோடு மண்ணாய்ப் போககாலிலை மிதிபட்டு பிறர் கண்ணுக்கு தெரியாது போக எழுதுகிறார். விட்டார்களா சும்மா! போதகரே; என்னசெய்வது சொல்லும் என்று அட்டகாசம் போடுகிறார்கள். நிமிர்ந்தார், பார்த்தார், கூறினார் ஒரு வார்த்தை. "உங்களில் குற்றமில்லாதவன் முதலில் கல் எறியட்டும். ஒருவர் ஒருவராய் விலகினர். ஓடித்தப்பினர். பெண் மட்டும் தனித்து தன்பாடு எப்படி என்று தவிக்கிறாள். பெண்ணே ஒருவரும் கல் எறியவில்லையா! இல்லை[illegible]ண்டவரே. நானும் உனக்கு தண்டனை தரவில்லை போ. இனி பாவம் செய்யாதே. என்ன சுமைதீர்க்த ஆறுதலான அன்புக்கும், நன்றிக்கும், பாத்திரமான வார்த்தைகள். அவளுடைய பாவச்சீவியத்தை விட்டுவிடவும் காரணமாயிருந்தது அவரது சாந்தம்.

அவர் தம் சீவியத்தில் மட்டும் ஏன்? அவரது பாடுகளின் நேரமும்தான் சாந்த குணம். மலை உச்சியில் நின்று மங்கா விளக்காக ஒளிதந்தது. பூங்காவனத்தில் என்ன சாந்தம்! அவர் வாய்மொழியே அதற்குச் சாட்சி. "பிதாவே என் மனதின்படி அல்ல, ஆனால் உம் விருப்பம்!

அன்னாஸ்கைபாஸ் அநியாயமாய்க் குற்றம் சாட்டப்பட்ட போதும், கன்னத்தில் அறைந்து காறி உமிழ்ந்த போதும், கற்றூணில் கட்டி கசையடிபட்டு பரிகாச நிந்தைகளைச் சொரிந்தபோதும் நேசநீசன் மறுதலித்த போதும் அநியாயத் தீர்வை அளித்தபோதும், சிந்திப்போமா சற்று. சாந்தமே உருவெடுத்த பிறவி அல்லவா?

ஆன்மாவே ஏன் இன்னும் தாமதம் தயக்கம். தம் பிக்காக எதையும் தாங்கும் இதயம் படைத்தவர். கண்ணை இமை காப்பதுபோல் காத்து, தம் இதய சாந்தத்தையும் தாழ்ச்சியையும் எமக்கு கற்றுத் தருவார். யேசுவே எங்கள் இருதயம் உமது இருதயத்தைப் போலாகப் பண்ணியருளும்.

## தீய தோழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலங்குகளுடன் உறவாடி உயிர்வாழ முடியுமா? தீயநட்பும் இப்படித்தான். ஆகவே, நாம் நண்பர்களைத் தெரிந்தெடுப்பதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கண்டகண்ட நண்பர்களுடன் நட்புப் பூண்டு நமக்கே நாம் கேடு விளைவித்துக் கொள்ளக் கூடாது. ஒருவன் எப்படிப்பட்டவன், அவனுடைய ஒழுக்கம் எத்தகையது என்பதைத் தெரியாது அவனுடன் நட்புப்பூண்டு உறவாடுவது கேடு விளையுமேயொழிய, ஒருபோதும் நன்மை பயக்காது.

இயல்பிலே நல்லவர்களா இருப்பவர்களைக் கூடச் சூழ்நிலை கெடுத்து விடுவதுண்டு. ஒரு மனிதனைச்சுற்றி எத்தனையோ மனிதர்கள் உலவுகிறார்கள். அவர்களுள் எத்தனையோ தரத்தினர் இருக்கிறார்கள். அவர்கள் எத்தனையோ செய்திகளைப்பற்றிப் பேசுகிறார்கள். எத்தனையோ செயல்களைச் செய்கிறார்கள். அவைகள் எல்லாம் ஒருவனைப் பாதிக்கா திருப்பதில்லை. ஒருவன் சந்திக்கும் ஆள், நோக்கும் காட்சி, கேட்கும் செய்தி ஆகிய இவை அனைத்தும் அவனைப் பாதிக்கின்றன. அவனைத் தெரியாமலேயே அவை அவனை அமைக்கின்றன. அவற்றின் தன்மை அவனின் உள்ளும் புறமும் சிறுகச்சிறுகப் படிகிறது. நல்ல சூழ்நிலையாயிருந்தால் அவன் நல்லவனாயிருப்பான், தீய சூழ்நிலையாக இருந்தால் அவன் தீயவனாக மாறிவிடுகிறான். ஆகவே ஒவ்வொரு மனிதனும் தீய சூழ்நிலைகளினால் பாதிக்காது தன்னைத் தற்காத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறான்.

தீய சூழ்நிலை என்று கூறும்போது கெட்ட சகவாசம்மட்டுமல்ல, தீய திரைப்படங்கள், நாடகங்கள், இசைத்தட்டுநடனங்கள், தீயநூல்கள் இன்னும் இவைபோன்ற அனைத்தும் தீய சூழ்நிலைகள் தாம்! கூந்தலையும் படங்களையும் அலங்கரிக்கும் மல்லிகைமலர் வாடிவிட்டால் கீழே எறியப்பட்டு மிதிபடுவதுபோல, நல்ல மனிதன் சூழ்நிலையினால் கெடும்பொழுது அவன் சமுதாய வெறுப்புக்கு ஆளாவதும் திண்ணம்!

எனவே, திறமையான ஆட்டக்காரன்பந்து எப்படிவந்தாலும் ஏமாறாமல் விழிப்புடன் விளையாடுவதுபோல, நாமும் (குறிப்பாக வாலிபர்கள்) சாத்தானின் ஏஜெண்டுகளான தீய தோழர்களைக் கண்டு ஏமாறாமல் விழிப்புடன் நம்மைத் தாமே காத்துக்கொள்வோமாக.

— சத்திய போதினி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குருக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 2-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org